செய்தி இலாகாப் பதிவு பெற்றது

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals
Library

# தந்தி

இல: 1058 | 1970 ஜூன் 17 புதன்கிழமை | ★ | விலை சதம் 5

## கண்டிப் பகுதி கிராமத்தில் சம்பவம்:

# உணவில் விஷம்? மூவர் பலி! 8 பேருக்கு ஆபத்து

**கோதுமை மாவு ரொட்டி சாப்பிட்ட பலரில் மூவர் துடி, துடித்து மரணமானர்கள். எட்டு பேர் உயிருக்காக ஆஸ்பத்திரியில் போராடிக் கொண்டிருக்கின்றனர்.**

கண்டி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கரந்தகொல்லை என்னும் கிராமத்திலேயே இச் சம்பவம் நடந்துள்ளது. கோதுமை மாவு ரொட்டி சாப்பிட்ட பல குடும்பங்களைச் சேர்ந்த எட்டு பேர் கடுமையாக சுகவீனமுற்று கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்குப்பட்டதோடு மூவர் பரிதாபகரமாக மரணமானர்கள்.

இவர்களில் இருவர் ரிக்கில்ல கஸ்கட கிராம ஆஸ்பத்திரியில் மரணமானர்கள். 17 வயதுடைய ஜயமெனிக்கே என்னும் யுவதி கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் முன்னரே மரணமானர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்குப் பட்டிருப்போரில் 20 வயதுடைய எச். எம். கருணவதி, 18 வயதுடைய பத்திரன, 20 வயதுடைய லீலாவதி, கமலாவதி, 18 வயதுடைய எஸ். எஸ். ஜயசூரிய, எச். எம். ரன்பண்டா ஆகியோரின் நிலை ஆபத்தானதாக இருப்பதாக அறிவிக்குப்பட்டுள்ளது.

இவர்கள் சாப்பிட்ட ரொட்டியில் விஷம் கலந்திருக்கலாம் எனச் சந்தேகிக்குப்படுகின்றது. கண்டி பொலீசார் இதுபற்றி விசாரணை செய்து வருகின்றனர். (ர)



உலக அழகுராணிப் போட்டிகளின் போது அழகுராணிகள் தமது வனப்பைக் காட்ட அணியும் வெண்ணிற நீச்சலுடைகள் இப்போது கடற்கரைகளில் பாஷனுகி விட்டது.

## வண. அமரவன்ஸ தேரோ தொடர்ந்து ரிமாண்டில்

14 கைக்குண்டுகள் வைத்திருந்ததாக சந்தேகிக்குப்பட்டு கைது செய்யப்பட்ட வண- தேவமொட்டாவ அமரவன்ஸ தேரோவையும் வேறு நால்வரையும் இம்மாதம் 27-ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி நீர்கொழும்பு நீதவான் உத்தரவிட்டார்-

இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் விசாரணை நடத்தப்பட வேண்டி இருப்பதால் சந்தேக நபர்களுக்குப் பிணை விதிக்க நீதவான் மறுத்துவிட்டார்- பொலீஸார் கைப்பற்றிய கைக்குண்டுகள் அரசாங்க ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன-

பியசோம, விஜேசேன, ரூப்ப சிங்ஹ, விக்ரமபால ஆகியோர் ஏனைய சந்தேக நபர்களாவர்- கைக்குண்டுகள் கண்டெடுக்குப்பட்ட வீடு வண- அமரவன்ஸ தேரோவின் பெற்ருேர் குடியிருப்பது எனக் கூறப்படுகின்றது- (ர)

## மிருச்சி



என்னுங்க, ஐம்பத்தைந்து வயதென்றதும் எல்லா அரசாங்க உத்தியோகத்தரும் வீட்டுக்குப் போக வேண்டுமாமே!

ஆமாங்க, அப்படியென்ருல்தானே இளந்தர வழிகளுக்கும் இடம் கிடைக்கும்!

## பஸ்-ரயில் மோதல் பற்றி ஆராய உத்தரவு

கொழும்பு, ஜூன்- 17 கடந்த 14-ம் திகதி எஹலியகொடையில் நடைபெற்ற பஸ் - ரயில் மோதல் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இரு அதிகாரிகள் நியமிக்குப்பட்டுள்ளனர்-

## ஜவுளி மோசடி

சலுசல ஸ்தாபனத்தில் ஜவுளி வாங்குவோராக முன்னைய அரசாங்கத்திஞல் நியமிக்குப்பட்ட சில வர்த்தகர்கள், சலுசல ஊழியர் சிலரின் உதவியுடன் நடத்தியதாகக் கூறப்படும் ஜவுளி மோசடி ஒன்று நேற்று- கண்டு பிடிக்குப்பட்டது- (ர)

## பாதுகாவல் நீக்கப்பட்டது

பொதுத் தேர்தலை அடுத்து நாடு முழுவதுக்கும் அளிக்குப்பட்ட ஆயுதம் தரித்த பொலீஸ பாதுகாப்பு இப்போது படிப்படியாக நீக்குப்பட்டு வருகின்றது-

கொழும்பு நகரில் இப்பொலீஸ் பாது-காப்பு நேற்று பெருமளவில் குறைக்குப்பட்டது- (ர)

## பாடசாலைகளிலும் மக்கள் கமிட்டி

அரசாங்குப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது பெற்ருேர் எதிர்நோக்க வேண்டிய தொல்லைகளை நீக்குவதற்காக அரசாங்க உயர்தர பாடசாலைகளில் மக்குள் குமிட்டிகளை நிறுவுவது எனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது-

இதே வேளையில், மீண்டும் பாடசாலைகளை புனரமைத்து எட்டாம் வகுப்பில் சித்தியடையும் மாணவர்களுக்கு விசேஷ தராதரப் பத்திரம் வழங்கவும் அமைச்சு எண்ணி உள்ளது-

55 வயதைக் கடந்த பல தரப்பட்ட தரங்களையும் சேர்ந்த சுமார் 5000 ஆசிரியர்களை ஓய்வு பெறச் செய்யவும் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது-

கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்ற கல்வி ஆலோசனைக் கமிட்டியின் விசேஷ கூட்டம் ஒன்றிலேயே இம் முடிவுகள் செய்யப்பட்டன-

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதற்காக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க விசேஷ குமிட்டியொன்றை நியமிப்பதெனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது-

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதற்காக பாடசாலையுடன் மூன்று ஏக்கர் காணியையும் அரசாங்கத்திற்கு வழங்கும்படி கல்வி மந்திரி கோரிக்கை விடுவதெனவும் தீர்மானிக்குப்பட்டது-

(4-ம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய் துருவாத காரணத்தால்

# வேலைக்கார சிறுமி மீது வெந்நீர் ஊற்றினராம்

## தம்பதிகள் மீது பொலீஸ் வழக்கு

தம் வீட்டின் வேலைக்காரச் சிறுமியான குசுமாவதி என்ற ஏழு வயதுச் சிறுமி மீது கொதி நீரை ஊற்றிக் காயம் உண்டுபண்ணியதாகக் குற்றம் சாட்டி, கொட்டியாகொட என்ற இடத்தைச் சேர்ந்த தம்பதிகள் மீது பொலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கில், கொட்டியாகொட, தெமுனுமாவத்தை 28-3-ம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த திருமதி நளினி நந்தா விஜேசிங்ஹ, திரு சரத் விஜேசிங்ஹ ஆகியோரே பிரதிவாதிகளாவர்.

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு நந்தா விஜேசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில், வெலிக்கடை பொலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"கடந்த மே மாதம் 17-ம் திகதி இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி குசுமாவதி ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர். அவரது தந்தை யார் என்று தெரியாது. இந்தச் சிறுமி கடந்த மூன்று வருடங்களாக சந்தேக நபர்களின் வீட்டில் வேலைக்காரச் சிறுமியாக இருந்து வருகிறார்.

"சம்பவம் நடைபெற்ற தினம் இரவு சுமார் 11-30 மணியளவில் நள்ளிரவு உணவுக்காக தேங்காய் துருவும்படி, முதலாவது சந்தேக நபர் சிறுமிக்கு உத்தரவிட்டார். அவர் அவ்விதம் செய்யத் தவறிவிடவே, சந்தேக நபர் சிறுமியின் மீது கொதி நீரைக் கொட்டினார். இதனால் சிறுமியின் உடலில் ஒரு பகுதி வெந்து போயிற்று.

"இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட திரு. டபிள்யூ. லயனல் பெர்னாண்டோ என்பவர் பொலீசுக்குத் தகவல் கொடுத்தார். ஸ்தலத்துக்கு விரைந்த பொலீசார் சந்தேக நபரைக் கைது செய்தனர். பின்னர் அந்தச் சிறுமி வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்."

சந்தேக நபர்கள் இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள மறுக்கவே, சிறுமி குசுமாவதியை வெள்ளவத்தை ஜயசேகரா விடுதியில் அனுமதிக்கும்படி உத்தரவிட்ட மாஜிஸ்திரேட், வழக்கு விசாரணையை ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க)

## தென்னை விழுந்து முதியவர் மரணம்

தென்னை மரம் ஒன்று மேலே விழுந்து நசுக்கியதால், மூன்று பிள்ளைகளின் தந்தையும், 70 வயதுடையவருமான எச். பியசேன பெரேரா என்பவர் பரிதாபமாக மரணமானார். (க)

## போத்தல்விளக்குபாலகனின் உயிரைப் பலி கொண்டது

அருகில் இருந்த போத்தல் விளக்கு தவறி படுக்கையில் விழுந்து உடையில் தீப்பிடித்ததால் நித்திரையிலிருந்த ஐந்து வயதுச் சிறுவன் பரிதாபமாக இறந்த சம்பவம் ஒன்று ஓட்டமாவடியில் நடைபெற்றுள்ளது.

ஓட்டமாவடி 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறுவன் முகம்மத் லியார் முகம்மது சுபைர். வயது 5. இரவு பத்து மணியளவில் தனது தந்தையின் அருகில் தூங்கும் போது போத்தல் விளக்கு தவறிக் கீழே விழுந்ததால் சிறுவன் சுபைரின் உடையில் தீப்பிடித்தது.

சிறுவனின் அழுகுரல் கேட்டு விழித்துக் கொண்ட தந்தையும் அயலவர்களும் சேர்ந்து தீயை அணைத்தனர். எரிகாயங்களுடன் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மூன்று தினங்களின் பின்னர் ஆஸ்பத்திரியில் காலமானான்.

மரண விசாரணையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

கோரளைப்பற்று மரண விசாரணை அதிகாரி திரு. சி. காராளசிங்கம் மரண விசாரணை நடத்தினார். போத்தல் விளக்கு தவறி விழுந்ததால் உண்டான எரிகாயங்களால் சம்பவித்த மரணம் என்று அவர் தீர்ப்புக் கூறினார். (க)

## மீன்பிடிகூட்டுத்தாபன அதிபர் மீது இடைக்கால தடை உத்தரவு

திரு. டபிள்யூ பிரான்சிஸ் வாஸ் என்பவரைத் தவிர வேறு எவருக்கும் ஒரு வள்ளத்தை வழங்கக் கூடாது என்று, கொழும்பு மேலதிக மாவட்ட நீதபதி திரு. ஜே. எப். ஏ. சூஸை மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிபர் மீது இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தார்.

நீதிமன்ற விசாரணை முடியும் வரை தன்னைத்தவிர வேறெவருக்கும் வள்ளம் ஒன்றைக் கையளிக்கக்கூடாதென்று மட்டகொட்டுவெல என்ற இடத்தைச் சேர்ந்த திரு. டபிள்யூ பிரான்சிஸ் வாஸ் மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிபருக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கும்படி மனுச்செய்திருந்தார்.

மீன்பிடி கூட்டுத்தாபன அதிபரின் திட்டங்களின்படி ஒரு இயந்திர வள்ளத்தை வாங்குவதற்காக ஆயிரம் ரூபா பிணை கட்டியதாகவும், ஆனால் திரு. வாஸின் எதிரிகளின் முறைப்பாட்டின் மீது, மீன்பிடி அதிபர் இயந்திர வள்ளத்தை வழங்க மறுத்து விட்டாரென்றும் திரு. வாஸ் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த வள்ளம் கிடைக்குமென்ற நம்பிக்கையில், 8000 ரூபா பெறுமதியில் வள்ளத்துக்குத் தேவையான பல பொருட்களை வாங்கிவிட்டதாகவும், வள்ளம் கிடைக்காவிட்டால் தமக்கு பலத்த நஷ்டம் ஏற்படுமென்றும், அதனால் 16,000 ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. வாஸ கேட்டுள்ளார். (க-15)

## சுகாதார உதவி மந்திரி

மீரிகமை தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திருமதி சிவா ஒபயசேகரா சுகாதார உதவி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இராணி மாளிகையில் மகா தேசாதிபதி திரு. வில்லியம் கொபல்லாவ முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (க)

## கல்விச் சேவை கமிஷனை நிறுவ அமைச்சர் முடிவு

கல்விப் பகுதியில் உள்ள புதிய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்காக வெகு விரைவில் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு கல்விச் சேவைக் கமிஷனை நிறுவ கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூத் திட்டமிட்டுள்ளார்.

புதிய நியமனங்களின் போதும் பதவி உயர்வு, இடமாற்றங்களின் போதும் அங்கு அரசியல் முட்டுக்கட்டை இருக்கக் கூடாது என்பதை மனதில் கொண்டே அமைச்சர் கல்விச் சேவைக் கமிஷன் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளார் என அறியப்படுகின்றது.

கல்விப் பகுதியில் ஏதாவது இறுதி முடிவுகள் எடுக்கப்படும் பொழுது தொழிற் சங்கங்களின் ஆலோசனையும் கோரப்படும்.

பிரஸ்தாப கல்விச் சேவைக் கமிஷனில் அதிகமான அங்கத்தவர்கள் இடம்பெற மாட்டார்கள். (க)

## 'அப்பலோ-13' கோளாறுக்கு மனசாரத் தடையே காரணம்

இரண்டு மாதங்களுக்கு முன் அப்பலோ 13 விண்வெளி வீரர்களுக்கு நிகழவிருந்த ஆபத்துக்கு, தகுதியற்ற கலச அமைப்புக்களும், வேறு பல பிழைகளுமே காரணமென இதையிட்டு விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கூடிய சக்தி வாய்ந்த பிராணவாயு பாவித்தால் தீயினால் ஆபத்தேற்படுமோ என்பதையறிய அப்பலோ - 13 விண்வெளிக் கலசம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நாஸா நிர்வாகஸ்தர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விரிவான அறிக்கையிலேயே இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

பிராணவாயு டாங்கியிலுள்ள ஒரு மின்சாரத் தொடர்பில் ஏற்பட்ட கோளாறுதான் விண்வெளி வீரர்கள் பூமியை நோக்கி விரைவதற்குக் காரணமாக அமைந்தது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. (க-15)

## ஒத்திவைப்பு

திருகோணமலை, ஜூன். 16

ஐந்து கஞ்சாச் செடிகளை தோட்டத்தில் வளர்த்த குற்றத்தை ஒப்புக்கொண்ட முகமது என்பவருக்கு தண்டனை விதிப்பதை திருமலை நீதவான் இன்றைய திகதிக்கு ஒத்திவைத்தார். (287)

## 'அதிசய மாமா' குற்றவாளியல்ல

ஹல்மிலாவ கற்பழிப்பு வழக்கு விசாரணை, அஸைஸ் நீதியரசர் திரு. ஜீ. டி. சமரவிக்கிரமா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, எதிரி குற்றவாளி அல்ல என்று ஜூரிமார் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில், "அதிசய மாமா" என்று அழைக்கப்படும் மன்னதேவாகே லூவிஸ் சிங்ஹோ என்பவர் இம்புலான ஆராச்சிகே சுபத்திரா என்ற பெண்ணை கடந்த 1967-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி கற்பழித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

குற்றம் சாட்டப்பட்டிருந்த லூவிஸ் சிங்ஹோ ஒரு குழந்தைக்குத் தந்தையாவார். (க)

## காணவில்லை

சின்னையா சோனையம்மாள்

18 வயது நிரம்பிய 5 அடி உயரமுள்ள, சிகப்பு நிறமான சின்னையா சோனையம்மாள் 3-6-70 முதல் காணவில்லை. அவரைக் கண்டுபிடித்து இருக்குமிடத்தைப் பற்றி கீழே குறிப்பிட்ட முகவரிக்கோ, அல்லது கலகா பொலீஸ் நிலையத்துக்கோ சரியான தகவல் கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும். ராஜா சுப்பையா, வெல்லூற் கொலனி, உக்குரஸ்ஸ ரோட், கலஹா.

### வாய்ப்பு அளித்திடுக!

பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதில் பள்ளிக்கூடம் செல்லாது இன்று ஏறத்தாழ ஏழு லட்சம் சிறுவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். இதற்குக் காரணம், தாய் தந்தையரின் வறுமை, போதிய பள்ளிக்கூடங்கள் இல்லாமை, பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயது முறையாக நிர்ணயிக்கப்படாமை ஆகியவைகளாம். இப்போது சோஷலிஸக் கொள்கை உடைய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. எல்லா மக்களுக்கும், அதாவது இங்கு எல்லாச் சிறுவருக்கும் சம வாய்ப்பு அளித்துக் கல்வி கற்கச் செய்ய வேண்டியது அதன் நீங்காக் கடமையாகும். எனவே, எல்லாப் பிள்ளைகளும் கல்வி பெறுமாறு எல்லா வசதிகளையும் செய்வதற்கான வழி வகைகளை அது விரைவில் அளித்தல் வேண்டும்.

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75 வயதுடைய எதிர்மனுதார் கேட்டார்:

# "இந்த வயதில் எனக்கு ஆசைநாயகி எதற்கு?"

### ஜீவனாம்சத் தொகைகாணாது என்று மனைவி வழக்கு

"இந்தத் தள்ளாத வயதில் எனக்கு எதற்கு ஆசைநாயகி? மனுதாருக்கு ஏற்கனவே 25 ரூபா ஜீவனாம்சம் கட்டிக் கொண்டிருக்கிறேன். அவர் என்னிடம் மீண்டும் வர விரும்பினால், நான் அவரை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்".

காலி மாஜிஸ்திரேட் திரு எல். எம். பி. வீரசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனாம்ச வழக்கில், மேற்கண்டவாறு கூறினர் எதிர் மனுதார்.

இந்த வழக்கில், 65 வயது மூதாட்டியான சார்லட் சில்வா, தனது கணவரும், 75 வயது முதியவருமான எம். ஜி. வெல்வின் சில்வாவிடமிருந்து மேலதிகமாக ஜீவனாம்சம் பெற்றுத் தருமாறு கோரி மனு ஒன்றைத் தாக்தல் செய்திருந்தார்.

தமது கணவருக்கு பென்ஷன் கிடைப்பதாகவும், அது தவிர அவரது ஆசைநாயகியிடமிருந்து கிடைப்பதாகவும் குறிப்பிட்ட மனுதாரான சார்லட் சில்வா, தனக்கு எதிர்மனுதார் செலுத்தி வரும் ஜீவனாம்சப் பணம் காணாதென்றும், மேலதிகமாக ஜீவனாம்சத் தொகை பெற்றுத் தரும்படியும் கோரியிருந்தார்.

எதிர்மனுதார் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"கடந்த 1967-ம் ஆண்டு முதலே நான் மனுதாருக்கு ஜீவனாம்சம் செலுத்த வருகிறேன். ஆரம்பத்தில் 10 ரூபா வீதம் செலுத்தினேன். பின்னர் 25 ரூபா வீதம் செலுத்தி வருகிறேன். அதே நேரத்தில், நான் நீண்ட காலமாக ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுகிறேன். இப்பொழுதும் நான் ஒரு நோயாளி.

"எனது மகனுடைய குடும்பத்தையும் நானே பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளேன். அடலின் என்ற பெண், எனது மகனின் மாமியார். அவர் எனது ஆசைநாயகி அல்ல. இந்தத் தள்ளாத வயதில் எனக்கு எதற்கு ஆசை நாயகி?"

மனுதாரினதும், எதிர்மனுதாரினதும் மகனான எச். ஜி. குலசேகரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"நான் திருமணமானவன். எனக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. எனது குடும்பத்துக்கும் எனது தந்தையே செலவழித்து வருகிறார். நான் வீட்டில் தங்கி எனது தந்தையைக் கவனித்து வருகிறேன்.

"அடலின் எனது மாமியார். அவர் எனது தந்தையின் ஆசை நாயகி என்று கூறுவது முழுப் பொய்". — இப்படிக் கூறினர், மகன்.

இந்தக் கட்டத்தில், மாஜிஸ்திரேட் வழக்கு விசாரணையை ஜூலை மாதம் 2-ம் திகதி வரை ஒத்தி வைத்தார். (க)

### "வரி செலுத்தும்; இல்லாவிட்டால் மறியல் தான்"

அனுராதபுரம் விஜேந்திரா தியேட்டரின் உரிமையாளர், 5000 ரூபா தமாஷாவரி செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. மேவின் விஜயசிங்ஹா பணம் முழுவதையும் செலுத்தும்படி சந்தேக நபருக்கு உத்தரவிட்டு, தவறினால் மூன்று மாதம் மறியலுக்குப் போக நேரிடும் என்று எச்சரித்தார். (க)

### ரயில் கார்—பஸ் விபத்தில் கண்டக்டர் மரணமானார்

பண்டாரவளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. விசேஷ பஸ் ஒன்று, ரயில் காருடன் மோதியதால் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். 12 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பயங்கர விபத்து எகலியகொடையிலுள்ள மொரகல சந்தி ரயில் கடவையில் நடைபெற்றது.

பஸ்ஸின் கண்டக்டரான 35 வயதுடைய டபிள்யூ. டி. தயானந்தா என்பவரே விபத்தில் இறந்துள்ளார்.

மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள மூவர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். காயமடைந்த ஏனையோர் எகலிகொடை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

இந்த விசேட பஸ்ஸில் பிரயாணஞ் செய்தவர்கள் கொழும்பில் நடைபெற்ற நாடாளுமன்றத் திறப்பு விழாவைத் கண்டுகளிக்க வந்தவர்கள் எனத் தெரிகிறது.

பஸ் முற்றாக சேதமடைந்தது, ரயில் கார தடம் புரண்டது. இதனால் இரண்டு மணி நேரம் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது. (க-15)

### குடிவெறியில் நடுவீதியில் அம்மணமாய் நின்றாராம்

திருகோணமலை, ஜூன். 16

அண்மையில் திருமணமான ஒரு வாலிபர் குடிவெறியில் பகிரங்க வீதியில் அம்மணமாக நின்றாராம். இத்தகவல் திருகோணமலை நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்த வழக்கு ஒன்றில் வெளியானது.

டபிள்யூ. டி. தாமசிரி என்ற வாலிபர் மீது சீனன்குடாப் பொலீஸார், ஒழுங்கீனமாக நடந்து கொண்டது, அம்மணமாக பகிரங்க வீதியில் நின்றது, பொலீஸ் அதிகாரியை அவதூறுகப் பேசியது ஆகிய மூன்று குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

வழக்கு விசாரணைக்கு வந்த பொழுது எதிரி மூன்று குற்றச் சாட்டுகளையும் ஒப்புக் கொண்டார்.

தொடர்ந்து எதிரியை முதலாவது குற்றத்திற்காக எச்சரித்து விடுதலை செய்தார், நீதவான்.

இரண்டாவது குற்றம் பற்றி எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதவானிடம் "ஐயா, எதிரிக்கு அண்மையில் தான் திருமணம் நடந்தது. தண்டனை விதிப்பதில் கருணை காட்டுங்கள்"— என்று விண்ணப்பித்தார்.

நீதவான் எதிரிக்கு ஐம்பது ரூபா அபராதம் விதித்தார்.

மூன்றாவது குற்றச்சாட்டு குறித்து, நீதவானின் உத்தரவுப்படி சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரியிடம் எதிரி பகிரங்க மன்னிப்புக் கோரினார். அத்துடன் மேலும் 25 ரூபா அபராதம் எதிரிக்கு விதிக்கப்பட்டது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சம்பந்தர் ஆஜரானார். சப் இன்ஸ்பெக்டர் யோசப் வழக்கை நடத்தினார். (237)

### பிறந்த மேனி திறந்தபடி இறந்து கிடந்தாள் பெண்

பிறந்த மேனி திறந்தபடி இறந்து கிடந்த இளம்பெண்ணின் பிரேதம் ஒன்று "தம்செயர்" துப்பறியும் பொலீசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தோட்ட வீடொன்றிலே கிடந்ததாம் இந்த நிர்வாணப் பிரேதம்.

இருபத்திரண்டு வயதான லிண்டா மார்க்கிறட் புல என்ற பருவப் பெண்ணே கொலையுண்டவள் எனக் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. ஒரு நிறுவனத்தில் கணக்காளராகப் பணியாற்றி வந்த இந்த இளம் பெண்ணின் பிரேதத்திற்கு அருகில், கைப்பை, துணிவகைகள், கூடை ஒன்று ஆகியவை காணப்பட்டனவாம்.

இக் கொலை சம்பந்தமாக கொலையுண்டவரின் ஸ்தாபன உரிமையாளரான திரு. பிஷப் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"கடந்த இரண்டு வருடங்களாக எனது ஸ்தாபனத்தில் கடமையாற்றி வந்த செல்வி புல் சுவையான வாழ்க்கையை விரும்பும் ஓர் அடக்கமான பெண்.

அவர் மாலை நேரங்களில் தனியாக நீண்ட தூரம் நடந்து செல்வார். அவரது செயல்கள் மற்றவர்களுக்கு புரியாத புதிராகவே இருந்து வந்தன.

அவரை கொலை நடப்பதற்கு முதல் இரவு 11 மணியளவில் நான் கண்டேன். அப்போது அவர் தனது நண்பர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார்"— இப்படிக் கூறி முடித்தார் திரு. பிஷப்.

மற்றும் பலர் சாட்சியமளித்தார்கள். ஆயினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (க-7)

### தலைவரானார்

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமனால் நியமிக்கப்பட்டுள்ள ஆறுபேர் கொண்ட வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டக் கமிட்டிக்கு, திருமதி மொரீன் செனவிரத்தின தலைவராகக் கடமையாற்றுவார். (க)

### தோட்டங்களை கூறு போட்டு சேமலாபநிதி மோசடியா?

ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேமலாபநிதி போன்றவற்றைத் தட்டிக் கழிப்பதற்காக பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் தமது தோட்டங்களை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து விற்கிறார்கள். இதனால் அநேக தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளனர்.

காணிச் சட்டத்தின்படி வருமானமில்லாத தோட்டங்களைத் தான் கூறு போட்டு விற்க முடியும். இதைச் சாட்டாக வைத்து அநேகர் தோட்டங்களைக் கூறு போட்டு விற்கின்றனர்.

அண்மையில் தென் மாகாணத்தில் நல்ல வருமானம் தரக்கூடிய ஆயிரம் ஏக்கர் தோட்டமொன்று, பெருந்தொகையான தொழிலாளரின் சேமலாப நிதியை இல்லாமற் செய்வதற்காக, இவ்வாறு கூறு போட்டு விற்கப்பட்டுள்ளது.

தோட்டக் கைத்தொழில் அமைச்சர் இது சம்பந்தமாக விசாரணை நடாத்தி வருகிறார். (க-15)

### கசுக்கொட்டை பதனிடுவதற்கு இயந்திரம்

லண்டன், ஜூன், 16

கசுக்கொட்டைகளைப் பதனிடும் நவீன இயந்திரம் ஒன்று பிரிட்டனில் உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டனில் உள்ள உஷ்ண வலய உற்பத்திப் பொருள் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்தப் புதிய இயந்திரம் ஒரு வருடத்தில் 1,000 தொன் பச்சையான கசுக் கொட்டைகளைப் பதனிடும் சக்தி படைத்தது. (க)

### அபராதம்

திருகோணமலை, ஜூன். 16

கஞ்சா சுருட்டு புகைத்த குற்றத்தை ஒப்புக் கொண்ட அப்துல் சாலீம் என்ற நபருக்கு திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா, பத்து ரூபா அபராதம் விதித்தார்,

திருகோணமலை, ஜூன். 16

வேறு நபர்களுக்குச் சொந்தமான ஐந்து அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வைத்து இருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட செல்வபாக்கியம் என்ற பெண்ணுக்குத் திருகோணமலை நீதவான் திரு. விக்ரமசேகரா 50 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

பாவிக்கக்கூடாது தடை செய்யப்பட்ட கத்தி ஒன்றை வைத்து இருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட எச். பீற்றர் என்பவருக்கு திருகோணமலை நீதவான் திரு. டபிள்யூ. விக்ரமசேகரா 50 ரூபா அபராதம் விதித்தார். (287)

### இரு மாதங்களில் ஓட விடப்படும்

இ. போ. ச. டிப்போக்களில் பழுதடைந்து கிடக்கும் பெரும்பாலான பஸ்கள் இன்னும் இரண்டு மாத காலங்களுக்குள் பொதுமக்கள் பாவனைக்கு ஓட விடப்பட இருப்பதாக இலங்கை போக்குவரத்து சபை இயக்கப் பிரிவு அறிவித்துள்ளது. (க)

### பார்க்லிக்கு விளக்கமறியல்

அலெக்ஸாண்டிரியா, (வேர்ஜினியா), ஜூன், 16

11 தினங்களுக்கு முன் துப்பாக்கி முனையில் ஒரு விமானத்தை மறித்து 1 லட்சம் டாலர் பிணையாகப் பெற்ற ஆர்தர் பார்க்லி என்பவரை சமஷ்டி நீதிபதி ஒருவர் மேலும் ஒரு வாரம் விளக்கமறியலில் வைத்தார்.

49 வயதான இந்த மனிதர் மெக்ஸிகோவுக்கு மேலே ஜெட் விமானம் ஒன்றை மறித்ததால் அவர் மீது விமானக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அவர் மீது மனோவைத்தியப் பரிசோதனை செய்வதற்காகவே, மேலும் ஒருவாரம் விளக்க மறியலில் அவரை வைக்க உத்தரவிடப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த ஆறு மாதங்களுக்கான

# உப உணவு இறக்குமதிக்கு ஆறு கோடி ரூபா ஒதுக்கீடு

### பதுக்கல் பேர் வழிகளை ஒடுக்க நடவடிக்கை

நடப்பு வருடத்தின் அடுத்த ஆறு மாதங்களுக்கும் தேவையான உப உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கென அரசாங்கம் ஆறு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கருவாடு, மாசி, பருப்பு, பம்பாய் வெங்காயம், பால்மா, கொத்தமல்லி, சீரகம், மிளகாய் ஆகியன இறக்குமதி செய்யப்படும். உணவுக் கமிஷனர் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், தனியார்துறை ஆகியன மூலமாக இவை இறக்குமதியாகும்.

இவற்றிக்கான லைசென்சுகள் தற்போது ஏற்றுமதி இறக்குமதி திணைக்களத்தினால் வழங்குப்படுகிறது. இந்த லைசென்சுகளைத் தாமதமின்றி வழங்குமாறு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

உப உணவுப் பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்படும் என்ற வதந்திகளை அடுத்து கள்ளச் சந்தைக்காரர்கள் உப உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து கொள்ளை லாபம் அடிக்கத் தொடங்கி விட்டதால் அதை முறியடிக்கவே உடனடியாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டது போல பால் உணவுகளின் விலையைக் குறைக்கவும், ஜவுளி, மருந்து வகைகளை மலிவாக விற்கவும், கொத்தமல்லி, மைசூர் பருப்பு ஆகியவற்றின் கட்டுப்பாட்டை நீக்கவும் திரு. இலங்கரத்தின தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்.

கள்ளச் சந்தை, பதுக்கல், கொள்ளை லாபம் ஆகிய மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

### கள்ளக் கூப்பன்கள்

லங்கா சலுசல விற்பனை நிலையங்களில் பலவற்றிலிருந்து அநேக கள்ளக் கூப்பன்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக விசாரணை நடாத்துமாறு துப்பறியும் பொலீஸாரை லங்கா சலுசலவின் தலைவர் கேட்டுள்ளார். (க)

### பாடசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் பொறுப்பை பாடசாலை தலைவர், இரு ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நால்வர், கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கொண்ட மக்கள் கமிட்டியிடம் விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ர)

### நாளை பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்

லண்டன், ஜூன். 17

பிரிட்டனில் நாளை பொதுத் தேர்தல் நடைபெற விருக்கிறது. காமன்ஸ் சபையின் 630 ஸ்தானங்களுக்கு சுமார் 3,70,00,000 பேர் வாக்களிப்பார்கள்.

ஆளும் கட்சியான தொழிற் கட்சி வெற்றி பெறும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை 18 வயதானவர்களும் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியில் கறுப்பர் குடியேற்றத்தை நிறுத்துமாறு திரு. இனேக்பவல் தீவிர இயக்கம் நடத்தி வருகிறார். (ய)

### தோட்டப் பிரச்சினைகளை தீர்க்க ஆலோசனை சபை

தோட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களும் அடங்கிய ஆலோசனைச் சபைகள் நிறுவப்பட உள்ளன. இதற்கான திட்டம் தயாராகி விட்டது.

மேற்கண்ட தகவலை தோட்டத் துறை அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தன்னைப் பேட்டி கண்ட ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தூது கோஷ்டியிடம் தெரிவித்தார்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் தூது கோஷ்டி ஒன்று அதன் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் எம். பி. தலைமையில் தோட்டத் துறை அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை நேற்று முன்தினம் பேட்டி கண்டது.

இத்தூதுக் குழுவில் ஜ. தொ. கா. பொதுக் காரியதரிசி திரு. வி. பி. கணேசன், நிர்வாகக் காரியதரிசி திரு. எம். ஜெயராம், உப தலைவர் ஜனாப் தௌ முகம்மது சாகிபு, உதவிக் காரியதரிசி திரு. ஜயச்சந்திரா, அரசியல் காரியதரிசி, ஜனாப் முஸ்தபா, மாதர் சங்கத் தலைவி திருமதி நல்லசெல்வம் ஆகியோரும் இடம்பெற்றனர்.

இப்பேச்சு வார்த்தையின் போது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டொறிக் டீ சூசா, உதவி அமைச்சர் திரு. அல்பேர்ட் காரியவாசம் ஆகியோரும் கலந்து கொண்டனர் (க)

### ஆறு மாதத்தில் அரசியலை துறக்கிறார் பிரதமர் துங்கு

மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இன்னும் ஆறு மாத காலத்தில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவார். அத்துடன் தமது பிற்கால வாழ்க்கையில் பெரும் பகுதியை சமய, கலாச்சாரப் பணிகளைச் செய்வதற்கு அர்ப்பணிக்கவும் அவர் தீர்மானித்துள்ளார்.

இத்தகவலை அவரே நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

மலேஷியப் பிரதமர் நேற்று லண்டன் செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 45 நிமிடங்கள் தங்கித் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

விமான நிலையத்தில் வைத்து பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மலேஷியப் பிரதமரை வரவேற்றார்.

"மலேஷிய மக்கள் இலங்கை மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள், அத்துடன் உங்கள் பிரதமரும் நானும் நெருங்கிய சிநேகிதர்கள். உங்கள் நாட்டின் வளர்ச்சியில் எங்களுக்கும் அக்கறை உண்டு. ஆகையால் ஐக்கிய முன்னணி அரசு வெற்றிப் பாதையில் ஏறுநடை போட வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்" என்று மலேஷியப் பிரதமர் துங்கு மேலும் சொன்னார்.

"பிரதமராக இருக்கும் அதே வேளையில் உத்தேச இஸ்லாமிய செயலகத்தின் பொதுச் செயலாளராகவும் நான் பணி புரிவேன். முஸ்லிம் நாடுகளிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதே எனது நோக்கம்" என்றும் பிரதமர் துங்கு தெரிவித்தார். (க)

### பத்தாயிரம் அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறுவர்

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் 55 வயதிற்கு மேற்பட்ட ஊழியர்களை கட்டாய ஓய்வு பெறச் செய்வது என்ற அரசாங்கத்தின் புதிய முடிவின்படி சுமார் பத்தாயிரம் அரசாங்க ஊழியர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெறுவார்கள்.

இந்தத் தகவலை அரசாங்க சேவை நிர்வாகம் உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா "தந்தி" நிருபரிடம் தெரிவித்தார்.

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் 55 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களை கட்டாய ஓய்வு பெறச் செய்வது என அரசாங்கம் தீர்மானித்து இருப்பது தெரிந்ததே.

இந்தத் தீர்மானத்தை அடுத்தே சுமார் பத்தாயிரம் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் சேவையில் இருந்து கட்டாய ஓய்வு பெறுவார்கள் என்று திரு. மகாதேவா "தந்தி" நிருபரிடம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"அரசாங்கத்தின் முடிவின்படி சேவையில் உள்ள 55 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களின் விபரங்கள் பற்றிய புள்ளி விபரங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"அரசாங்கத்தின் இந்த முடிவு சம்பந்தமாக சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட உள்ளது. அந்தச் சுற்று நிருபத்தில் இந்த முடிவைத் தொடர்ந்து ஏற்படும் காலி ஸ்தானங்கள் மற்றும் விபரங்கள் இடம்பெறும். அந்தச் சுற்று நிருபம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகிறது.

"பகிரங்க சேவைக் கமிஷனின் அங்கீகாரம் பெற்றதும் இந்தச் சுற்று நிருபம் அடுத்த வாரம் வெளியிடப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (க)

### சலுசல கோரிக்கை

திரு டக்லஸ் பெரேராவை புதிய தலைவராகக் கொண்ட லங்கா, சலுசல நிறுவனம், தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கு "பீக்ஸ்" திட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்குமாறு அரசாங்கத்தைக் கோர இருக்கின்றது.

இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கு பீக்ஸ் விதிவிலக்கு அளிக்கப்பட்டால் துணிகளின் விலையை யார் ஒன்றிற்கு தற்போது உள்ளதிலும் பார்க்க 50 சதம் குறைத்து விற்கலாம் என புதிய தலைவர் தெரிவித்தார். (க)

### யூத கோவிலைப் பொலீஸார் காவல் புரிகின்றனர்

மியூனிச் (மேற்கு ஜெர்மனி), ஜூன், 16

மியூனிச்சிலுள்ள யூதர்களின் புனித ஆலயம் சேதப்படுத்தப்பட்டதை அடுத்து பொலீசார் அதை இரவு பகலாகக் காவல் புரிகின்றனர்.

சென்ற மாதம் நகரிலுள்ள யூத வயோதிகர் விடுதி ஒன்றுக்குத் தீ மூட்டப்பட்டதால் ஏழு பேர் மாண்டனர்.

இப்போது யூத ஆலயத்தில் ஜன்னல்கள் நொறுக்கப்பட்டும், விலை உயர்ந்த புனிதச் சின்னங்கள் அங்கும் இங்கும் வீசப்பட்டும், நொறுக்கப்பட்டும் காணப்பட்டன. மோஸஸின் ஐந்து புத்தகங்கள் தரையில் வீசப்பட்டுக் கிடந்தன.

மியூனிச்சில் இப்போது 5000 யூதர்கள் வசிக்கிறார்கள். யுத்தத்திற்குமுன் அங்கு 50,000 யூதர்கள் வசித்தார்கள்.

இன்றும் ஜெர்மனியில் 2,30000 யூதர்கள் வசிக்கிறார்கள். யுத்தத்திற்குமுன் ஜெர்மனியில் 15 லட்சம் யூதர்கள் வசித்தார்கள். (க)


கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை — கொழும்பு.

விற்குமிடம்:—

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 17 ஜூன் 1970

Thanthi 5. Gunasena Mawa tha, Colombo 12.